# முதியோரை உரையாடலில் ஈடுபடுத்தும் தொடக்க உதவித்தொகுப்பு





வர்த்தகங்களும் தொழில்களும்



## நன்றியுரை

இத்தொகுப்பின் தயாரிப்புக்குப் பங்களித்த எங்களின் பங்காளிகள், சமூகச் சேவை அமைப்புகள், சமூகப் பராமரிப்புத் துறையினர், மூத்தோர், தொண்டூழியர்கள் ஆகியோருக்கு தேசிய மரபுடைமைக் கழகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது. முதியோரை உரையாடலில் ஈடுபடுத்தும் தொடக்க உதவித்தொகுப்பின் முதல் இரண்டு தொடர்களைக் கூட்டிணைந்து தயாரித்த தேசிய சமூகச் சேவை மன்றத்திற்கும் எங்களின் நன்றி.

### பங்காளிகளும் சமூகச் சேவை அமைப்புகளும்

ஆங்லிக்கன் மூத்தோர் நிலையம், ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு, சிங்கப்பூர் வழிகாட்டி நாய்கள் லிமிடெட், ஆரஞ்ச் வேலி மூத்தோர் நடவடிக்கை நிலையம் (உட்லண்ட்ஸ் பீக்), சேஜ் ஆலோசனை நிலையம், செங்காங் சமூக மருத்துவமனை, செயின்ட் ஆன்ட்ரூஸ் தாதிமை இல்லம், செயின்ட் ஆன்ட்ரூஸ் மூத்தோர் பராமரிப்புச் சேவை.

### மையக் குழு உறுப்பினர்கள்

- திருவாட்டி மெண்டி லிம், உதவி மேலாளர், மூத்தோர் மையங்கள் (கல்வி மற்றும் சமூக எட்டுதல்), தேசிய மரபுடைமைக் கழகம்
- திருவாட்டி ஜின்சியான் பாங், திட்டப்பணி அதிகாரி, மூத்தோர் மையங்கள் (கல்வி மற்றும் சமூக எட்டுதல்), தேசிய மரபுடைமைக் கழகம்
- திரு டொன் இயூ, நிர்வாகி, சேஜ் ஆலோசனை நிலையம்
- திருவாட்டி பிரபா டெக்னா மிட்டி, மூத்த சமூகப் பணியாளர், செங்காங் சமூக மருத்துவமனை
- திரு சுவா பக் சியாங், திருவாட்டி சுவா யொக் பெங் லொரேன், திருவாட்டி கெர்ரி கிட்டரஸ் சம்ப்ரானோ, திருவாட்டி லிம் பீ ஹொங் சிண்டி, டாக்டர் சோனா பிரனவ் குமார், திருவாட்டி சில்வியா கோஸ்டா, திருவாட்டி டான் டீ கெங், திருவாட்டி வாங் குவெய் ஃபாங், திருவாட்டி வோங் லே கியாவ் ரெஜினா, மற்றும் தொண்டூழியர்கள் அனைவருக்கும் சிறப்பு நன்றி.

### உரையாடலில் ஈடுபடுத்தும் தொடக்க உதவித்தொகுப்பைப் பற்றிய விவரம்

முதியோரை உரையாடலில் ஈடுபடுத்தும் உதவித்தொகுப்பு என்பது தேசிய மரபுடைமைக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட வளங்களின் தொகுப்பாகும். ஒவ்வொரு தொகுப்பிலும் ஒரு கருப்பொருளைச் சார்ந்த 20 படங்கள் இருக்கும். ஒவ்வொரு படத்திற்கும் சில கேள்விகள் இருக்கும். மூத்தோர், அவர்களது குடும்பத்தினர், பராமரிப்பாளர்கள், தொண்டூழியர்கள் ஆகியோருக்கு இடையில் அர்த்தமுள்ள உரையாடலைத் தூண்டுவது இதன் நோக்கம். இந்த உதவித்தொகுப்புகள், 2018 முதல் பல்வேறு சமூகப் பராமரிப்புச் சூழல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன. மூத்தோருடன் கலாசாரம் சார்ந்த உரையாடலைத் தொடங்குவதற்கு இது நல்லதோர் அறிமுகக் கருவியாகப் பயன்படுகிறது.

## உதவித்தொகுப்பைப் பயன்படுத்துவது எப்படி

எப்போதுமே ஒவ்வோர் அங்கத்திற்கும் முன்பாக, உதவித்தொகுப்பின் உள்ளடக்கத்தையும் கருப்பொருட்களையும் முழுமையாகப் படித்து தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்.

### நேர்முகமான நடவடிக்கை




1. உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, நடவடிக்கையின் நோக்கத்தை எடுத்துச் சொல்லுங்கள்.
2. படம் பங்கேற்பாளரையும், பனுவல் உங்களையும் பார்த்தபடி இருக்கும்போது தொடங்குங்கள்.
3. உரையாடலைத் தொடங்க அல்லது விரிவுபடுத்த, கேள்விகளை ஒரு வழிகாட்டியாகப் பயன்படுத்துங்கள்.
4. நேரம் இருந்தால், ஒவ்வொரு பக்கத்திலும் உள்ள QR குறியீடுகளை வருடி, இணைய வளங்களையும் காணொளிகளையும் காணுங்கள்.

### வேலைகள், தொழில்களின் பட்டியல்

1. மரச் செருப்பு செய்பவர்
2. பாரம்பரிய சீன மருத்துவர்
3. பிரம்பு நெய்பவர்
4. வீதியோர நாவிதர்
5. மூன்று சக்கர மிதிவண்டி ஓட்டுநர்
6. ஒளிக்கூண்டு செய்பவர்
7. காய்கறி வியாபாரி
8. சாத்தே வியாபாரி
9. *சம்சுய்* மாது
10. *துவாகாவ்* படகுத் தொழிலாளி
11. சீனக் கம்பிப்பாவை கூத்தாடி
12. பாம்பாட்டி
13. பேருந்து நடத்துநர்
14. கூலித் தொழிலாளி
15. சோதிடர்
16. தட்டச்சர்
17. மீனவர்
18. *ஆமா*
19. மளிகைக்கடை உரிமையாளர்
20. பெண் தையல்காரர்

### குழு நடவடிக்கை



1. பங்கேற்பாளர்களை மேசையைச் சுற்றி அல்லது ஓர் இடத்தில் ஒன்றுசேருங்கள்.
2. ஒவ்வொரு பங்கேற்பாளராலும் உங்களைப் பார்க்க முடிவதை உறுதிப்படுத்துங்கள்.
3. உங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, நடவடிக்கையின் நோக்கத்தை எடுத்துச் சொல்லுங்கள்
4. தொகுப்பில் படம் உள்ள பக்கத்தைத் தெளிவான கோணத்தில் தூக்கிப்பிடித்துக் காட்டுங்கள்.
5. பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவராகப் படத்தைப் பற்றிய எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கொடுங்கள்.
6. அவர்கள் காண்பதை வர்ணிக்கச் சொல்லி, படத்தின் பொருள்/மையக்கரு பற்றிய எண்ணங்களை வெளிப்படுத்த ஊக்கம் கொடுங்கள்.
7. பங்கேற்பாளர்களிடம் பகிர்ந்துகொள்ள கதைகள் இருந்தால், கேள்விகளைப் பயன்படுத்தி அவர்களுக்கு இடையில் இயல்பான உரையாடல் உருவாக அனுமதியுங்கள்.

Roots

இன்னும் பல காணொளிகள், கதைகள், வளங்களுக்கு, தேசிய மரபுடைமைக் கழகத்தின் Roots.gov.sg இணையத்தளத்தை நாடுங்கள்.

**உங்கள் கருத்துகளை நாங்கள் கேட்டறிய விரும்புகிறோம்!**

உங்கள் கருத்துகளைப் பின்வரும் இணையத்தளத்தில் எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்: https://go.gov.sg/nhb-cskfeedback

# ஒரு கடையில் மரச் செருப்பு செய்பவர், 1970கள் - 1980கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1190794

# ஒரு கடையில் மரச் செருப்பு செய்பவர், 1970கள் - 1980கள்

## பின்னணி:

சிங்கப்பூரில் 1970கள் முதல் 1980கள் வரை இருந்த ஒரு கடையில் மரச் செருப்பு செய்பவர் காணப்படுகிறார்.

இரண்டாம் உலகப் போருக்குமுன் சிங்கப்பூரில் வாழ்ந்து வந்த மக்கள் பலரும் மரச் செருப்புகளை அணிவது வழக்கமாக இருந்தது. இந்தச் செருப்புகள் வழுக்கும் தன்மையற்றவை. அதோடு, ஈரமான தரைகளில் பாதங்களும் ஆடையும் நனையாத வகையில் உயரமான மரத்திலான அடிப்பகுதியைக் கொண்டவை. அதனால், இந்தச் செருப்புகளைப் பலரும் விரும்பி அணிந்தனர்.

மரச் செருப்பு செய்தவர்களில் பலரும் சீனக் குடியேறிகளாக இருந்தனர். இவர்கள் சைனாடவுன் போன்ற வட்டாரங்களில் கடைகளை அமைத்து செருப்புகளை விற்பனை செய்தனர். வெட்டுப்பலகை, வெட்டுக்கத்தி, பேனாக்கத்தி போன்ற கருவிகளைப் பயன்படுத்தி, மரக் கட்டைகளைச் செதுக்கி செருப்புகளை வடிவமைத்தனர். பிறகு, ரப்பர், பதனிட்ட தோல் அல்லது பிளாஸ்டிக் துண்டுகளை வெட்டி, பலகையின் இரு பக்கங்களிலும் ஆணியடித்து வார் போலப் பிணைத்தனர்.

1. இந்த மரச் செருப்புகளை நீங்கள் எங்கே வாங்க முடியும்?
2. மரச் செருப்புகளை இதற்குமுன் அணிந்திருக்கிறீர்களா? அவற்றை அணியும் போது எப்படி இருந்தது?
3. மரச் செருப்புகள் எப்படி செய்யப்படுகின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா?



மரச் செருப்பு செய்பவர்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்- e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk3-clogshoemaker

# பாரம்பரிய சீன மருத்துவர்கள் பயன்படுத்திய நிலைப்பேழை, 1920கள் - 1940கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் ஆசிய நாகரிக அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளும்படி அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1121010

# பாரம்பரிய சீன மருத்துவர்கள் பயன்படுத்திய நிலைப்பேழை, 1920கள் - 1940கள்

## பின்னணி:

1920கள் முதல் 1940கள் வரையிலான காலக்கட்டத்தைச் சேர்ந்த பாரம்பரிய சீன மருத்துவ நிலைப்பேழை. இது தேக்கு மரத்தால் செய்யப்பட்டது. பாரம்பரிய சீன மருந்துக் கடைகளில் காணப்படும் இந்த நிலைப்பேழைகள், மூலிகைகளைப் பெயரிட்டு சேமித்து வைக்க பயன்படுத்தப்பட்டன. மருத்துவர் எழுதிக்கொடுக்கும் அளவுகளில் அந்த மூலிகைகளைச் சூடாக்கி, இடித்து, பல்வேறு வடிவங்களிலான மருந்துகள் தயாரிக்கப்பட்டன.

பாரம்பரிய சீன மருத்துவம் ஆதிகால சீனாவில் தோன்றியது. மனித உடல் பல்வேறு பாதைகளின் கட்டமைப்பால் ஒன்றுடன் ஒன்று இணைந்த முழுமையான ஒன்று என்ற சித்தாந்தமே இதன் அடிப்படை. இந்தக் கட்டமைப்பு, "*சீ*" ("சக்தி" என்று அர்த்தம்) அல்லது இரத்தத்தை உடலின் எல்லா பாகங்களுக்கும் கொண்டு சென்று சமநிலையை அடைகிறது.

இன்று, மேற்கத்திய மருத்துவ சிகிச்சைகளுக்குத் துணையான மருத்துவமாகப் பாரம்பரிய சீன மருத்துவம் அங்கீகாரம் பெற்றுள்ளது. சிங்கப்பூரில் பற்பல மருந்தகங்களிலும், தனியார், பொது மருத்துவமனைகளிலும் பாரம்பரிய சீன மருத்துவச் சேவை வழங்கப்படுகிறது.

1. இந்த நிலைப்பேழை எதற்குப் பயன்பட்டதாக நினைக்கிறீர்கள்?
2. இதுபோன்ற நிலைப்பேழைகளை எங்கு காணலாம்?
3. பாரம்பரிய சீன மூலிகைகளின் சுவை உங்களுக்குப் பிடிக்குமா? ஏன் அல்லது ஏன் இல்லை?

பாரம்பரிய சீன மருத்துவம் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-tcm

சிங்கப்பூரின் சுகாதாரப் பராமரிப்பு வரலாற்றைப் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-healthcare

# பிரம்பு நெய்பவர்கள் செய்த பொருட்கள், 1950கள்





தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி (இடது)
பெராணகன் அரும்பொருளகத்தின் திரட்டு (வலது)
https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1160405
https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1257633

# பிரம்பு நெய்பவர்கள் செய்த பொருட்கள், 1950கள்

## பின்னணி:

மலர் வடிவிலான பூத்தையல் வேலைப்பாட்டுடன் 1950களில் பிரம்பில் செய்யப்பட்ட பெண்களின் தோள் பையும் (இடது), குழந்தையின் படுக்கையாகப் பயன்பட்டிருக்கக்கூடிய 1950களின் பிரம்புக் கூடையும் (வலது). பாரம்பரியமாகப் பிரம்பு நெய்பவர்கள், கொடிவகை பனையான பிரம்பத்தைப் பயன்படுத்தி கையாலேயே பலவகை பொருட்களைச் செய்வார்கள். பைகள், கூடைகள், அறைகலன்கள் போன்றவை அவற்றுள் அடங்கும். பிரம்பு நெய்பவர்கள், வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப வடிவமைத்து, தடித்த, மெல்லிய பிரம்புகளைக் கலந்து நெய்வார்கள்.

இந்திய, மலாய், சீனப் பின்புலங்களைச் சேர்ந்த பற்பல சமூகங்கள் சிங்கப்பூரில் பிரம்பக் கைவினைக் கலையில் ஈடுபட்டிருந்தன. பிரம்புத் தொழில்துறை 1960கள் முதல் 1970கள் வரை உச்சத்தில் இருந்தது. அந்தக் காலகட்டத்தில், பிரம்பு தயாரிப்புக்கும், கையால் நெய்யப்பட்ட உயர்தரமான பிரம்புப் பொருட்களின் வர்த்தகத்திற்கும் சிங்கப்பூர் பெயர்பெற்று விளங்கியது.

இன்று, பாரம்பரியமாகப் பிரம்பு நெய்பவர்களில் மிகச்சிலரே கையால் பிரம்புப் பொருட்களை இன்னமும் செய்து வருகின்றனர்.

1. இந்தப் பை/கூடை எந்தப் பொருளில் செய்யப்பட்டது?
2. உங்களிடம் இதுபோன்ற பை/கூடை இருந்ததா?
3. பிரம்பிலிருந்து வேறு என்ன பொருட்களைச் செய்ய முடியும்?



பிரம்புப் பொருட்கள் செய்வது பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-rattanmaking

மரபுடைமை அத்தியாயங்களைப் பாருங்கள் – பிரம்பு நெய்த கடைசி ஆள்
https://go.gov.sg/nhbcsk3-rattanweaver

# வீதியோர நாவிதர், 20ஆம் நூற்றாண்டின் துவக்கம்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1080361

# வீதியோர நாவிதர், 20ஆம் நூற்றாண்டின் துவக்கம்

## பின்னணி:

20ஆம் நூற்றாண்டின் துவக்கக் காலத்தைச் சேர்ந்த வீதியோர நாவிதர் ஒருவர் பணியில் ஈடுபட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

சிங்கப்பூரின் ஆரம்பகாலத்து வீதியோர நாவிதர்களில் பலர் சீன ஆண் குடியேறிகளாக இருந்தாலும், மலாய், இந்திய நாவிதர்களும் இருந்தனர்.

வீதியோர நாவிதர்களுக்கு ஒரு சிறிய இடமும், கத்தரிக்கோல், சீப்பு, பிரஷ், சவரக்கத்தி, பவுடர் பஞ்சு, முகம் பார்க்கும் கண்ணாடி போன்ற எளிய கருவிகளும் மட்டுமே தேவைப்பட்டன. சில நாவிதர்கள், வாடிக்கையாளர்களின் காதுகளைச் சுத்தம் செய்தல், முகத்தில் வளரும் முடியை வெட்டுதல், உடல்பிடிப்பு போன்ற கூடுதல் சேவைகளையும் வழங்கினார்கள்.

1. இவர் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. முடி வெட்டிக்கொள்வது உங்களுக்குப் பிடிக்குமா?
3. நீங்கள் இளையவராக இருந்தபோது, முடி வெட்டிக்கொள்ள எவ்வளவு செலவானது?

சிங்கப்பூரில் உள்ள பாரம்பரிய தொழில்களைப் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-traditionaltrades

மரபுடைமை அத்தியாயங்களைப் பாருங்கள் - வீதியோர நாவிதருடன் ஒரு சந்திப்பு
https://go.gov.sg/nhbcsk3-streetbarber

# மூன்று சக்கர மிதிவண்டி ஓட்டுநர், 1970கள்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1184725

# மூன்று சக்கர மிதிவண்டி ஓட்டுநர், 1970கள்

## பின்னணி:

மூன்று சக்கர மிதிவண்டி ஓட்டுநர் ஒருவர், 1970களில் சிங்கப்பூர் வீதிகளில் ஓட்டிச் செல்கிறார். சிங்கப்பூரில் 1914ஆம் ஆண்டில் மூன்று சக்கர மிதிவண்டிகள் முதன்முதலில் பதிவு செய்யப்பட்டன. அவை 1920களின் முற்பகுதியிலிருந்து பிரபலமான போக்குவரத்தாகத் திகழ்ந்தன.

கையால் இழுக்கும் பாரம்பரியமான ரிக்ஷா வண்டிகளைப் போலல்லாமல், இவை மிதித்து செலுத்தும் மிதிவண்டிகளாக இருந்ததால், பயணிகளையும் பொருட்களையும் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விரைவில் கொண்டு செல்ல முடிந்தது. அந்தக் காலகட்டத்தில் மோட்டார் வாகனங்களுக்குத் தேவைப்பட்ட பெட்ரோல் எளிதில் கிடைக்காததாலும், இந்த வண்டிகள் பலரும் நாடும் போக்குவரத்தாகப் பயன்பட்டன.

இன்று, உரிமம் பெற்ற நிறுவனங்களே பெரும்பாலான மூன்று சக்கர மிதிவண்டிகளை நிர்வகிக்கின்றன. அக்காலத்து சிங்கப்பூரை அனுபவிக்க விரும்பும் சுற்றுப்பயணிகளே இந்த வண்டிகளில் பெரும்பாலும் பயணிக்கின்றனர்.

1. இந்த ஆடவர் எதை ஓட்டிச் செல்கிறார்?
2. நீங்கள் இதற்குமுன் மூன்று சக்கர மிதிவண்டியில் பயணம் செய்திருக்கிறீர்களா? அந்தப் பயணம் உங்களுக்குப் பிடித்திருந்ததா?
3. சிங்கப்பூரில் மூன்று சக்கர மிதிவண்டி ஓட்டுநர்களை எங்கே பார்த்திருக்கிறீர்கள்?

ரிக்ஷா வண்டி இழுப்பவரின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk3-rickshaw-puller

மூன்று சக்கர மிதிவண்டி ஓட்டுநர்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk3-trishaw

# ஒளிக்கூண்டு செய்பவர்கள், 1970கள் – 1980கள்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1190164

# ஒளிக்கூண்டு செய்பவர்கள், 1970கள் - 1980கள்

## பின்னணி:

ஓர் ஆணும் பெண்ணும் பாரம்பரிய சீன ஒளிக்கூண்டுகளைச் செய்கின்றனர். இந்தப் படம் 1970கள் முதல் 1980கள் வரையிலான காலகட்டத்தைச் சேர்ந்தது.

பாரம்பரிய ஒளிக்கூண்டுகள் மூங்கிலில் செய்யப்பட்டன. எண்ணெய் தடவிய பட்டுத் தாளுடன் அவை மூடப்பட்டன. ஒளிக்கூண்டு செய்யும் முறையில் ஐந்து அடிப்படை அம்சங்கள் உள்ளன. நெளித்தல், கட்டுதல், ஒட்டுதல், வண்ணமடித்தல், ஒளியேற்றுதல் ஆகியன அவை. ஒளிக்கூண்டு ஒவ்வொன்றின் வடிவமும் வண்ணமும் அதன் மூலத்தைப் பிரதிபலிக்கும். தியோச்சூ ஒளிக்கூண்டுகளில் சற்று கரடுமுரடான, துரிதமான கீற்றுகள் இருக்கும். அதே சமயத்தில், ஃபூச்சோவ் ஒளிக்கூண்டுகள் பெரும்பாலும் உருளை வடிவில் விரிவான ஓவியங்களுடன் காணப்படும்.

சமய நிகழ்ச்சிகளில் அல்லது இறுதிச்சடங்கு, திருமணம் போன்ற நிகழ்வுகளை நினைவூட்டும் வகையில், ஒளிக்கூண்டுகள் காட்சிக்குத் தொங்கவிடப்படுவது வழக்கம். நிகழ்வைப் பொறுத்து, ஒளிக்கூண்டுகளில் வெவ்வேறு வண்ணங்களும் சின்னங்களும் தீட்டப்பட்டிருக்கும்.

சிங்கப்பூரில், சீனப் புத்தாண்டு, இலையுதிர்க்காலத் திருவிழா போன்ற பெரிய அளவிலான விழாக்களின்போது ஒளிக்கூண்டுகளைப் பரவலாகக் காணலாம். சைனாடவுன், கரையோரப் பூந்தோட்டங்கள், சன் யாட் சன் நன்யாங் நினைவு மண்டபம் போன்ற இடங்களில் பெரிய ஒளிக்கூண்டு காட்சிகளைக் காணலாம்.

1. இந்த ஆணும் பெண்ணும் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. சிங்கப்பூரில் ஒளிக்கூண்டுகளை எங்கு காணலாம்?
3. நீங்கள் இலையுதிர்க்காலத் திருவிழாவைக் கொண்டாடுவீர்களா? இந்தக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக உங்களுக்கு என்னவெல்லாம் செய்யப் பிடிக்கும்?

பாரம்பரிய சீன ஒளிக்கூண்டுகள் செய்யும் முறையைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-lanternmaking

மரபுடைமை அத்தியாயங்களைப் பாருங்கள் – பாரம்பரிய ஒளிக்கூண்டு ஓவியரின் கதை
https://go.gov.sg/nhbcsk3-lanternpainter

# வீதியோரச் சந்தையில் காய்கறி வியாபாரி, 1980கள்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1194918

# வீதியோரச் சந்தையில் காய்கறி வியாபாரி, 1980கள்

## பின்னணி:


காய்கறி வியாபாரி ஒருவர், 1980களில் சைனாடவுனில் காய்கறிகளை விற்பனைக்காகக் காட்சிக்கு வைத்திருக்கிறார்.

சிங்கப்பூருக்கு வந்த புதிய குடியேறிகளில் பலரும் உணவு, பானம், காய்கறிகள் போன்ற பொருட்களை வீதியோரமாக வியாபாரம் செய்தனர். பிழைப்பு நடத்துவதற்கான எளிய வழியாக இது இருந்ததால், வசதி குறைவான, படிப்பறிவில்லாத மக்கள் இதுபோன்ற வேலைகளைச் செய்தனர்.

மொத்த விற்பனையாளர்கள், சரக்கு இறக்குமதியாளர்கள் பலரும் தங்களது பொருட்களை விற்பனை செய்வதற்கு வீதியோர வியாபாரிகளையே பெரிதும் சார்ந்திருந்தனர். வீதியோர வியாபாரிகள் பலர், தங்களது பொருட்களைக் கூடைகளில் அல்லது தட்டுகளில் ஏந்தியவாறு வீதி வீதியாக நடந்து சென்று வாடிக்கையாளர்களைத் தேடுவார்கள். சில சமயங்களில், அதிகமான வாடிக்கையாளர்களைக் கவர்வதற்காக, அதிக போக்குவரத்துள்ள சாலைகளிலும் வீதியோர வியாபாரிகள் கூடுவார்கள்.

சட்டவிரோத வீதியோர வியாபாரத்தைத் தடுக்கவும், வியாபாரிகளை நிர்ணயிக்கப்பட்ட சமூக வட்டாரங்களுக்கு இடம் மாற்றவும், 1960கள் முதல் 1980கள் வரை தீவு முழுவதுமான பதிவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இன்று, வியாபாரிகள் அனைவரும் நிர்ணயிக்கப்பட்ட சந்தைகளில் அல்லது உணவங்காடி நிலையங்களில் கடை உரிமையாளர்களாகப் பதிவு செய்திருந்தால் மட்டுமே தங்களது பொருட்களை விற்பனை செய்ய முடியும்.

1. வீதியோர வியாபாரிகளிடம் நீங்கள் இதற்குமுன் என்ன வாங்கி இருக்கிறீர்கள்?
2. உங்களுக்கு வீதியோரச் சந்தைக்குச் செல்வது பிடிக்குமா அல்லது ஈரச் சந்தைக்குச் செல்வது பிடிக்குமா?
3. நீங்கள் மளிகைப் பொருட்களை வீதியோர அல்லது ஈரச் சந்தையில் அல்லது பேரங்காடியில் வாங்க விரும்புகிறீர்களா?



வீதியோர வியாபாரிகள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-streethawkers

# சாத்தே வியாபாரி, 1970கள் - 1980கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1191225

# சாத்தே வியாபாரி, 1970கள் – 1980கள்

## பின்னணி:

1970கள் முதல் 1980கள் வரையிலான காலக்கட்டத்தில், அனல் தெறிக்கும் நிலக்கரிக்கு மேலே சாத்தே குச்சிகளை வாட்டுவதற்காக விசுறுகிறார் ஒரு சாத்தே வியாபாரி.

சாத்தே என்பது கோழி, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி போன்ற மாமிச வகைகளைக் குச்சிகளில் செருகி அனலில் வாட்டும் சிங்கப்பூர் உணவாகும். இதனுடன் வெள்ளரிக்காய், வெங்காயம், கெத்துபாட் (சாதக்கற்றை), வேர்க்கடலை குழம்பு ஆகியன பரிமாறப்படும். "சதை" என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து சாத்தே என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது.

சாத்தே தற்காலிக உணவு வண்டிகளில் அல்லது கடைகளில் விற்கப்படுவது வழக்கம். அக்காலத்தில், வாடிக்கையாளர்கள் கடையைச் சுற்றிலும் மரத்தாலான முக்காலிகளில் அமர்ந்துகொண்டு, எனாமல் கிண்ணங்களில் பரிமாறப்பட்ட உணவு வகைகளை, பெரிய சட்டி நிறைய வேர்க்கடலை குழம்பில் தொட்டு சுவைத்தனர்.


சிங்கப்பூரின் எஸ்ப்லனேட் வட்டாரத்திலிருந்த பிரபலமான சாத்தே கிளப் 1971ல் திறக்கப்பட்டது. அந்தத் திறந்தவெளி உணவு நிலையத்திலிருந்த உணவுக் கடைகளில் பெரும்பாலானவை சாத்தே விற்பனை செய்தன. சூரியன் மறையும் நேரத்தில் தொடங்கி அதிகாலை வரை அந்தக் கடைகள் திறந்திருந்தன. குடும்ப விருந்துகளுக்கும் ஒன்றுகூடல்களுக்கும் அவ்விடம் பிரபலமாகத் திகழ்ந்தது. சிங்கப்பூரின் மேடைக்கலை மையமான எஸ்ப்லனேட் – கடலோரக் கலை அரங்குகளை அமைப்பதற்காக, 1995ல் உணவு நிலையம் இடிக்கப்பட்டது.

1. இந்த ஆடவர் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. உங்களுக்கு சாத்தே சுவை பிடிக்குமா?
3. உணவங்காடி நிலையத்தில் வேறென்ன உணவு வகைகளை உங்களுக்குச் சாப்பிடப் பிடிக்கும்?

எஸ்ப்லனேட்டில் இருந்த சாத்தே கிளப்பின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk3-satayclub

சாத்தே கடையிலிருந்த மரத்தாலான முக்காலியின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk3-sataystallstool

# சம்சுய் மாது, 1938 – 1939



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1141264

# சம்சுய் மாது, 1938 – 1939

## பின்னணி:

1938க்கும் 1939க்கும் இடையில், மண்ணும் கற்கூளங்களும் நிறைந்த வாளிகளைத் தோள்களில் தூக்கிச்சென்ற சம்சுய் மாது.

"சம்சுய்" என்ற பெயர், இந்த மாதர்களின் பின்னணியிலிருந்து வந்திருக்கலாம். இவர்களில் பலரும் தென் சீனாவின் சன்ஷுய் வட்டாரத்திலிருந்து வந்த கென்டனீஸ் அல்லது ஹக்கா குடியேறிகள். சம்சுய் மாதர்கள் 1930களின் மத்தியில் சிங்கப்பூருக்கு வரத் தொடங்கினார்கள். அவர்கள் பெரும்பாலும் கட்டுமானத் தளங்களில் கடினமான உடலுழைப்பு வேலைகளைச் செய்தார்கள்.

சம்சுய் மாதர்கள் தனித்துவமான சிவப்புநிற தலையங்கி அணிந்திருப்பார்கள். இது "ஹொாங் டாவ் ஜின்" ('சிவப்புநிறத்  தலையங்கி' என்பது அர்த்தம்) என்றழைக்கப்படும். சிவப்பு நிறத்தைத் தூரத்திலிருந்து எளிதில் கண்டுகொள்ளலாம் என்பதால் அந்நிறம் தேர்ந்தெடுக்கப்பட்டது. கட்டுமானத் தளங்களில் விபத்துகளைக் குறைப்பதற்கு இது உதவியது. இந்தத் தலையங்கி,  அவர்களது கடினமான, கண்ணியமான வாழ்க்கையின் அடையாளச் சின்னமாகப் பின்னர் மாறியது.


சிங்கப்பூரில் இன்று மிகச்சில சம்சுய் மாதர்களே இன்னமும் வாழ்கின்றனர். பெரும்பாலோர் காலமாகிவிட்டனர் அல்லது சீனாவுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

1. சம்சுய் மாது பிழைப்புக்காக எத்தகைய வேலை செய்தார் என நினைக்கிறீர்கள்?
2. இவரைப் போன்ற மாதரை இதற்குமுன் நேரில் அல்லது தொலைக்காட்சியில் பார்த்திருக்கிறீர்களா?
3. நீங்கள் வசிக்கும் வட்டாரத்தில் நிறைய கட்டுமானப் பணிகள் நடைபெறுவதைப் பார்க்கிறீர்களா? கட்டுமானத் தளங்களில் வேலை செய்வோர் யார்?

நன்யாங்குக்குச் சென்ற பயணத்தைப் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-nanyang

சிங்கப்பூரில் பிறந்த சய்சுய் மாது திருவாட்டி இங் மொயி சாய் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-ngmoeychye

# சிங்கப்பூர் ஆற்றில் சரக்குகளை ஏற்றும் துவாகாவ் படகுத் தொழிலாளிகள், 1970கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1183856

# சிங்கப்பூர் ஆற்றில் சரக்குகளைக் கொண்டு செல்லும் துவாகாவ் படகுத் தொழிலாளிகள், 1970கள்

## பின்னணி:

துவாகாவ் (லைட்டர் படகு) படகுத் தொழிலாளர்கள் 1970களில் சரக்குகளைக் கொண்டு செல்கின்றனர். 1900களின் முற்பகுதியில், கப்பல்களில் வரும் சரக்குகளையும் மற்ற பொருட்களையும் சிங்கப்பூர் ஆற்றங்கரைக்குக் கொண்டு செல்வதற்கு துவாகாவ் படகுகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டன. பெரும்பாலான படகுகளின் உரிமையாளர்கள் ஹாக்கியன் அல்லது தியோச்சூ பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள், சிங்கப்பூர் ஆற்றங்கரை ஓரத்திலேயே அருகாமையில் வசித்து வந்தனர்.

துவாகாவ் படகுகளில் சீன பாணியிலான கடல்சார்ந்த வடிவமைப்புகள் இருந்தன. அந்தப் படகுகள் எதிரே வரக்கூடிய ஆபத்துகளைப் “பார்க்கும்” வகையில், படகுகளின் முன்பகுதியில் “கண்கள்” வரையப்படுவது வழக்கம். பல படகுகளுக்குப் பச்சை, வெள்ளை, சிவப்பு போன்ற மங்களகரமான நிறங்களில் சாயம் அடிக்கப்பட்டிருந்தது. சிங்கப்பூர் ஆற்றைச் சுத்தப்படுத்தும் இயக்கம் 1980களில் தொடங்கப்பட்டதைத் தொடர்ந்து, பெரும்பாலான படகுகள் ஆற்றினுள் நுழைவதற்குத் தடை விதிக்கப்பட்டது.

இன்று, துவாகாவ் படகுகளில் மரத்தாலான இருக்கைகள் பொருத்தப்பட்டு, ஆற்று டாக்சிகளாகப் பயன்படுகின்றன. உரிமம் பெற்ற படகோட்டிகள், சுற்றுப்பயணிகளைப் படகில் ஏற்றிக்கொண்டு, சிங்கப்பூர் ஆற்றின் கண்கவர் காட்சிகளைச் சுற்றிக் காட்டுகின்றனர்.

1. இந்தத் தொழிலாளிகள் என்ன செய்வதாக நினைக்கிறீர்கள்?
2. நீங்கள் இதற்குமுன் துவாகாவ் படகில் பயணம் செய்திருக்கிறீர்களா?
3. சிங்கப்பூர் ஆற்றோரத்தில் உங்களுக்குச் செய்யப் பிடித்தவற்றில் சில என்ன?

சிங்கப்பூர் ஆற்றின் கதையைப் படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-singaporeriver

சிங்கப்பூர் ஆற்றோர நடையுடன் நடைபோடுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-singaporerivertrail

# சீனக் கம்பிப்பாவை கூத்தாடிகள் படைத்த கூத்து, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி



தேசிய மரபுடைமைக் கழகத்திற்கு நன்றி

https://www.roots.gov.sg/ich-landing/ich/chinese-puppetry

# சீனக் கம்பிப்பாவை கூத்தாடிகள் படைத்த கூத்து, 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதி

## பின்னணி:

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த சான் சுன் லொங் எனும் சீனப் பாவைக்கூத்து குழுவினர் படைத்த கூத்தில் இடம்பெற்ற ஹய்னானீஸ் கம்பிப்பாவைகள் இவை. பாரம்பரிய கலையான சீனப் பாவைக்கூத்து, 1920கள் முதல் சிங்கப்பூரில் சீனக் குடியேறிகளால் பரவலாக அரங்கேற்றப்பட்டது.

பாவைக் கூத்தாடிகள் மேடைக்குப் பின்னாலிருந்து பாவைகளை அசைப்பார்கள். இசைக்கலைஞர்கள் குடுகுடுப்பை, கிங்கிணி அல்லது புல்லாங்குழல் போன்ற இசைக்கருவிகளுடன் பின்னணி இசை வாசிப்பார்கள். இந்தக் கூத்துகள் வழக்கமான சீனக் கிளை மொழிகளில் அரங்கேற்றப்படும். பல தலைமுறைகளாக வழிவழியாக வந்த கதைகள் கூத்துகளில் சொல்லப்படும்.

இன்று, ஆலயம் போன்ற சமய வழிபாட்டுத் தலங்களிலும், பிறந்தநாள் அல்லது திருமணம் போன்ற சிறப்பு வைபவங்களிலும் பாவைக்கூத்து குழுக்கள் தொடர்ந்து கூத்துகளைப் படைத்து வருகின்றன. பக்தர்கள் பாவைக்கூத்து குழுக்களை வரவழைத்து, தெய்வங்களுக்காகக் கூத்து படைத்து, அதற்குப் பிரதிபலனாக நல்லாசியும் பாதுகாப்பும் பெறலாம்.

1. இவை யாருடைய உருவங்கள்? இவை எப்படி அசைகின்றன?
2. இதுபோன்ற கூத்தை இதற்குமுன் நீங்கள் பார்த்ததுண்டா?
3. உங்களுக்கு எத்தகைய கூத்துகளைப் பார்க்கப் பிடிக்கும்?

சீனப் பாவைக்கூத்து பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-chinesepuppetry

தெய்வங்களுக்காகப் படைக்கப்படும் சீனப் பாவைக்கூத்து நிகழ்ச்சியைப் பாருங்கள்
https://go.gov.sg/nhbcsk3-chinesepuppetperformance

# ஃபேபர் மலையருகில் பாம்பாட்டிகள், 1930கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1158244

# ஃபேபர் மலையருகில் பாம்பாட்டிகள், 1930கள்

## பின்னணி:

1930களில் பாம்புக் காட்சிகள் படைத்த பாம்பாட்டிகளும் அவர்கள் வளர்த்த பாம்புகளும்.

பாம்பாட்டிகளில் பலர், இந்தியாவின் மேற்கு மாநிலமான மஹாராஷ்டிராவின் பூனா நகரிலிருந்து வந்த குடியேறிகள். 1950களிலும் 1960களிலும் சாலையோரத்தில் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் படைக்கும் பிரபலமான கலைஞர்களாகப் பாம்பாட்டிகள் இருந்தனர். மூங்கிலும் தேங்காய் ஓடும் கொண்டு செய்த பாரம்பரிய மகுடியின் இசைக்கேற்ப பாம்புகளை “ஆட” வைத்து அவர்கள் பிழைப்பு நடத்தினர்.

பாம்பாட்டிகள் பலரும் ஹோட்டல்களுக்கு வெளியிலும், செந்தோசா, ஃபேபர் மலை போன்ற சுற்றுலாத் தளங்களிலும் சுற்றுப்பயணிகளுக்காகப் பாம்புக் காட்சிகளைப் படைத்தனர்.

இன்று, சிங்கப்பூரில் மிகச்சில பாம்பாட்டிகளே எஞ்சியுள்ளனர். அவர்கள் வெளிநாட்டு வருகையாளர்களுக்கும் சுற்றுப்பயணிகளுக்கும் பாம்புக் காட்சிகளைப் படைக்கின்றனர்.


1. நீங்கள் இதற்குமுன் பாம்பாட்டியின் பாம்புக் காட்சியைப் பார்த்திருக்கிறீர்களா?
2. அக்காலத்தில் சிங்கப்பூரில் எந்த இடங்களில் பாம்பாட்டிகள் காணப்பட்டனர்?
3. உங்களுக்குப் பாம்புகளைக் கண்டால் பயமா?



பாம்பாட்டியைக் கொண்ட அஞ்சல் தலை வடிவமைப்பு
https://go.gov.sg/nhbcsk3-snakecharmerstamp

# பேருந்து நடத்துநர் பயன்படுத்திய பயணச்சீட்டுத் துளைக்கருவியும் பேருந்து பயணச்சீட்டும், 1940கள் முதல் 1970கள் வரை






**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**


தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.


https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1162204

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1161108

# பேருந்து நடத்துநர் பயன்படுத்திய பயணச்சீட்டுத் துளைக்கருவியும் பேருந்து பயணச்சீட்டும், 1940கள் முதல் 1970கள் வரை

## பின்னணி:

பேருந்து நடத்துநர் பயன்படுத்திய உலோகப் பயணச்சீட்டுத் துளைக்கருவியும், 1940கள் முதல் 1970கள் வரை பயன்படுத்தப்பட்ட 10 காசு மதிப்புள்ள பேருந்து பயணச்சீட்டும். 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில், பேருந்துகளில் பேருந்து நடத்துநர்களைக் காணலாம். பயணிகளைச் சோதனை செய்வதும், பயணச்சீட்டுகளில் துளையிட்டு பயணத்தை உறுதி செய்வதும் அவர்களின் பொறுப்புகள். பயணிகள் பயணத்தைத் தொடங்கிய இடத்தைத் துளைகள் குறிக்கின்றன.

1980களில் அச்சிடப்பட்ட பயணச்சீட்டுகள் அறிமுகமானபோது, பயணச்சீட்டுகளில் துளையிடவேண்டிய அவசியமில்லாமல் போனது. அதனால் பேருந்து நடத்துநர்களுக்கும் அவசியமின்றி போனது. பின்னர், 1990ல் கட்டண அட்டை முறையும், அதன்பிறகு 2002ல் ஈசி-லிங்க் அட்டை முறையும் நடப்புக்கு வந்தன.

இன்று, சிங்கப்பூரில் பேருந்து நடத்துநரின் வேலை அவசியமின்றி போய்விட்டது. பயணிகள் பேருந்து கட்டணங்களைத் தவிர்க்கவிடாமல் தடுப்பதற்குப் பல்வேறு முனைப்புகள் நடப்பிலுள்ளன. பயணி பேருந்திலிருந்து இறங்கும்போது ஈசி-லிங்க் அட்டையைக் கருவியில் தட்டாவிட்டால் அதிகபட்சக் கட்டணத்தை அட்டையிலிருந்து கழிப்பது அவற்றுள் ஒன்று.

1. இடதுபக்கம் உள்ள பொருள் எதற்குப் பயன்படுத்தப்பட்டதாக நினைக்கிறீர்கள்?
2. பேருந்து பயணத்தில் உங்களுக்கு மிகவும் பிடித்த அம்சம் என்ன?
3. இன்றைய பேருந்து பயணங்களில் உள்ள வித்தியாசம் என்ன?

சிங்கப்பூரின் போக்குவரத்து பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk3-nationaltransportation

1935ல் நிறுவப்பட்ட க்ரீன் பேருந்து நிறுவனத்தை ப் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-greenbus

# சீனக் கூலித் தொழிலாளி, 20ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் மத்தி வரை



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1015774

# சீனக் கூலித் தொழிலாளி, 20ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் மத்தி வரை

## பின்னணி:

20ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் மத்தி வரையிலான காலக்கட்டத்தில், சீனக் கூலித் தொழிலாளி தன் தோள்களில் சாக்கு மூட்டையைத் தூக்கிச் செல்கிறார்.

“கூலி” என்ற சொல், “கூலி” என்ற இந்தி வார்த்தையிலிருந்து வந்திருக்கக்கூடும். இது கூலி என்ற மேற்கு இந்தியப் பழங்குடியினரின் பெயரைக் குறிப்பதாகும். கூலிகளே சிங்கப்பூருக்கு வந்த முதல் கூலித் தொழிலாளிகள் என நம்பப்படுகிறது. “கூலி” என்ற சொல், “கூ லி” (“கடின உழைப்பு” என்று அர்த்தம்) எனும் சீன சொல்லிலிருந்து வந்திருக்கலாம் என்பது மற்றொரு நம்பிக்கை.

பெரும்பாலான கூலித் தொழிலாளிகள் ஏழ்மையான சீனக் குடியேறிகளாக இருந்தனர். வேலையும் நல்ல வாழ்க்கையும் தேடி அவர்கள் சிங்கப்பூருக்கு வந்தனர். அவர்களில் பெரும்பாலோர் கட்டுமான, துறைமுக, நிலச்சுரங்கத் தொழிலாளர்களாக வேலைக்குச் சேர்ந்தனர். சுட்டெரிக்கும் வெயிலில் நெடுநேரம் சாக்கு மூட்டைகளில் பொருட்களைத் தூக்கிச்சென்று உழைத்தனர். சாக்கு மூட்டை என்பது சணலையும் மற்ற இயற்கையான நார்களையும் கொண்டு செய்யப்படும் பழுப்புநிறப் பை. தானியங்கள், மற்ற வகையான விளைப்பொருட்கள் போன்றவற்றை எடுத்துச்செல்ல இந்தப் பைகள் பயன்படுத்தப்பட்டன.

சிங்கப்பூரில் கூலித் தொழிலாளிகள் செய்துவந்த வேலைகளை இன்று கட்டுமான, உடலுழைப்பு ஊழியர்கள் செய்கின்றனர்.

1. இவர் என்ன செய்கிறார் என நினைக்கிறீர்கள்?
2. சாக்கு மூட்டைக்குள் என்ன இருப்பதாக நினைக்கிறீர்கள்?
3. இந்த ஆடவர்கள் வேலை செய்வதை இதற்குமுன் எங்கு பார்த்திருக்கிறீர்கள்?

1970களில் பயன்படுத்தப்பட்ட சாக்கு மூட்டையின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk3-ricesack

சிங்கப்பூரின் கூலிகள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk3-chinesecoolies

# சீன சோதிடர் எழுதிக்கொடுத்த சோதிடச் சீட்டு, 20ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் மத்தி வரை




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1089453

# சீன சோதிடர் எழுதிக்கொடுத்த சோதிடச் சீட்டு, 20ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் மத்தி வரை

## பின்னணி:

20ஆம் நூற்றாண்டின் துவக்கம் முதல் மத்தி வரையிலான காலக்கட்டத்தில், ஒரு தம்பதிக்கு சீன சோதிடர் எழுதிக்கொடுத்த சோதிடச் சீட்டு. இதில், தம்பதியர் பிறந்த தேதியும் நேரமும் இடம்பெற்றுள்ளன. திருமணப் பொருத்தம் பார்ப்பதற்கும், பல்வேறு சடங்குகளுக்கு நல்ல நாளும் நேரமும் பார்ப்பதற்கும் அந்த விவரங்கள் பயன்படுத்தப்பட்டன.

சிங்கப்பூரிலுள்ள ஐந்தடிப் பாதைகளில் 1800களிலிருந்து சோதிடர்கள் பரவலாகக் காணப்பட்டனர். திருமணம், தொழில் போன்ற விவகாரங்களுக்கு அவர்கள் ஆலோசனை வழங்கினர். பெரும்பாலான சோதிடர்கள் மரத்திலான மேசை, முக்காலி, புத்தர் சிலை, ஊதுவத்தி, புத்தகங்கள் போன்ற எளிய பொருட்களுடன் தொழில் நடத்தினர். கைரேகை பார்ப்பதும் பா ஜி சோதிடமும் (பிறந்த தேதியைக் கொண்டு ஒருவரின் எதிர்காலத்தைக் கணித்தல்) பிரபலமாக இருந்தன.

சோதிடம் பார்ப்பது இந்தியச் சமூகத்திலும் பிரபலமாக இருந்தது. இந்திய சோதிடர்கள் பலர் கிளி சோதிடம் பார்த்தனர். வாடிக்கையாளரின் பெயரையும் பிறந்த தேதியையும் “வாசித்த பிறகு”, கிளி தனது அலகால் ஓர் அட்டையைத் தேர்ந்தெடுக்கும். அந்த அட்டையின் உள்ளர்த்தத்தை கிளி சோதிடர் விளக்குவார். இன்று, பாரம்பரிய சோதிடர்களில் மிகச்சிலரே இன்னமும் சோதிடம் பார்க்கின்றனர். சிங்கப்பூரிலுள்ள சைனாடவுன், லிட்டில் இந்தியா வட்டாரங்களில் அவர்களைக் காணலாம்.

1. காகிதச் சீட்டில் என்ன எழுதப்பட்டிருப்பதாக நினைக்கிறீர்கள்?
2. நீங்கள் இதற்குமுன் சோதிடரிடம் சோதிடம் பார்த்ததுண்டா?
3. சோதிடத்தில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா?

பா ஜி சோதிட அட்டவணையின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk3-fortunechart

சிங்கப்பூரின் கிளி சோதிடர்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk3-parrotastrologers

# தட்டச்சர் பயன்படுத்திய ரெமிங்டன் தட்டச்சுப்பொறி, 1900கள்




ஜார்ஜ் கோ வழங்கிய அன்பளிப்பு. தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1120672

# தட்டச்சர் பயன்படுத்திய ரெமிங்டன் தட்டச்சுப்பொறி, 1900கள்


## பின்னணி:

ஸ்ட்ரெயிட்ஸ் குடியேற்றக் காவல்துறை 1900களில் பயன்படுத்திய ரெமிங்டன் தட்டச்சுப்பொறி

எழுத்துக் கருவியான தட்டச்சுப்பொறியை, அமெரிக்க செய்தித்தாள் ஆசிரியர் கிறிஸ்தஃபர் லதம் ஷோல்ஸ் என்பவர் 1868ல் கண்டுபிடித்தார். தட்டச்சுப்பொறியின் விசைப்பலகையில் உள்ள விசைகள், தட்டச்சர் அதிவேகமாகத் தட்டச்சு செய்து விசைகள் ஒன்றுடன் ஒன்று சிக்கிக்கொள்ளச் செய்வதைத் தவிர்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. தட்டச்சுப்பொறியின் விசைப்பலகைப் பயன்படுத்தும் “QWERTY” அமைப்புமுறையே உலகெங்கிலும் கணினிகளிலும் கைப்பேசிகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

20ஆம் நூற்றாண்டின் மத்தியில் தட்டச்சர்கள் வெளியீட்டு, நிர்வாக, எழுத்தர் துறைகளிலேயே வேலைக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆனால் இன்றைய சூழலில், தகவல் பதிவு பணிகளில் அமர்த்தப்படுவோரே தட்டச்சரின் பணியைச் செய்கின்றனர். தகவல் பதிவு பணியில் அமர்த்தப்படுவோர் தரவுகளைக் கணினியில் தட்டச்சு செய்கின்றனர்.

1. நீங்கள் இதற்குமுன் தட்டச்சுப்பொறியைப் பயன்படுத்தியதுண்டா?
2. உங்களுக்குத் தட்டச்சு செய்யப் பிடிக்குமா அல்லது பேனாவினால் எழுதப் பிடிக்குமா?
3. கணினியைப் பயன்படுத்துவது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?



1950களின் தட்டச்சுத் திறன் சான்றிதழின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk3-typing-exam

வரலாற்றிலுள்ள பல்வேறு வகையான தொடர்பு முறைகளைப் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-communications

# மீனவர் அணிந்த மூங்கில் தொப்பி, 1950கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் ஆசிய நாகரிக அரும்பொருளகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1077746

# மீனவர் அணிந்த மூங்கில் தொப்பி, 1950கள்


## பின்னணி:

மீனவர் ஒருவர் 1950களில் அணிந்த மூங்கில் தொப்பி இது. சிங்கப்பூர் 1800களில் இருந்தே மீன்பிடி கிராமமாக இருந்தபோதிலும், பண்டைக்கால சிங்கப்பூரா, அல்லது தெமாசெக், பரபரப்பான வர்த்தக, வணிக மையமாகத் திகழ்ந்ததாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன. அதன் தலைநகரம் சிங்கப்பூர் ஆற்றுவாயில் அமைந்திருந்தது.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம் முதல் மத்தி வரை, கம்போங்-களில் (கிராமங்கள்) வாழ்ந்துவந்த பல மலாய் குடும்பங்களுக்கு மீனவத் தொழிலே வருமானமளித்தது. இந்தக் குடும்பங்களின் வீடுகள் பலவும் ஆற்றங்கரையிலும் கடலோரப் பகுதியிலும் தாங்குகால்களுடன் உயர்த்தப்பட்ட மரப்பலகை மேடைகளில் கட்டப்பட்டிருந்தன. ஆற்றில் எளிதில் மீன்பிடிப்பதற்கு இந்த வீடுகள் ஏதுவாக இருந்தன. மீனவர்கள் பலரும், பெராஹு எனப்படும் பாரம்பரியமான சிறிய படகுகளைப் போக்குவரத்துக்கும் மீன்பிடிப்பதற்கும் பயன்படுத்தினார்கள். வலைகளை ஆற்றில் வீசி அவர்கள் மீன்பிடித்தனர்.

இன்று, மீன்பிடிப்பது ஒரு பொழுதுபோக்காக இருக்கிறது. ஆயினும், உரிமம் பெற்ற நிறுவனங்கள், பெரிய கப்பல்களில் இயந்திரங்களையும் நவீன சாதனங்களையும் பயன்படுத்தி வர்த்தகத்திற்காக மீன்பிடிக்கின்றன.


1. இந்தத் தொப்பி யாருக்குச் சொந்தமானதாக இருந்திருக்கும்?
2. நீங்கள் இதற்குமுன் கம்போங்கில் தங்கியதுண்டா?
3. உங்களுக்கு மீன் பிடிக்கத் தெரியுமா?



1950கள் முதல் 1960கள் வரை மீனவத் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவரின் புகைப்படம்
https://go.gov.sg/nhbcsk3-fisherman

சிங்கப்பூரின் மீன்பிடித் தொழில் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk3-fishinginsingapore

# சிறு பிள்ளைகளுடன் *ஆமா*, 1930கள்



**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

தேசிய மரபுடைமைக் கழகம், நியாயமான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்ட போதிலும், இந்தப் படத்தின் பதிப்புரிமை உரிமையாளர்களைக் கண்டறிய/அடையாளம் காண முடியவில்லை. உரிமையுள்ள உரிமையாளர்கள் எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கிறோம்.

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1141149

# சிறு பிள்ளைகளுடன் *ஆமா*, 1930கள்

## பின்னணி:

1930களில் சிறு பிள்ளைகளுடன் *ஆமா* (வீட்டுப்பணி உதவியாளர்).

சீனப் பெண் குடியேறிகள் பலரும் 1930கள் முதல் 1970கள் வரையிலான காலகட்டத்தில் *ஆமா* பணியில் சேர்ந்தனர். சுத்தம் செய்வது, சமைப்பது, பிள்ளைகளைப் பராமரிப்பது போன்ற வேலை வேலைகளைச் செய்வதற்காகப் பணக்காரக் குடும்பங்கள் அவர்களை வேலைக்குச் சேர்த்துக் கொண்டனர். *ஆமாக்கள்* பலரும் நீண்ட காலத்திற்குத் தங்கள் முதலாளிகளிடம் சேவை செய்ததால், முதலாளிகளின் பிள்ளைகளுடன் அவர்களுக்கு நெருக்கமான பந்தம் உருவானது. *ஆமாக்கள்* பலரும் குடும்ப அங்கத்தினராகவும் கருதப்பட்டனர்.

சில சமயங்களில் *ஆமா-க்களை மாஜி* (சீனாவின் ஷுண்டி மாவட்டத்திலிருந்து வந்த ஆமா-க்கள்) என்றும் குறிப்பிடுவார்கள். மற்ற *ஆமா*-க்களைப் போலல்லாமல், மாஜி-க்கள் வேலையில் சேர்வதற்குமுன் திருமணம் செய்துகொள்ளப் போவதில்லை என உறுதிமொழி எடுத்துக்கொள்வர். “*மாஜி*” என்ற சொல், கென்டனீஸ் மொழியிலுள்ள “*மா ச்சே*” (“அம்மாவும் சகோதரியும்”) என்ற சொல்லிலிருந்து உருவாகியிருக்கலாம்.

இன்று, பெரும்பாலான *ஆமா*-க்களும் மாஜி-க்களும் ஓய்வு பெற்றுவிட்டனர். சிங்கப்பூரிலுள்ள வீட்டுப்பணி உதவியாளர்களில் பெரும்பாலோர் அக்கம்பக்கத்திலுள்ள தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து வந்தவர்கள்.

1. *ஆமா* என்னென்ன வேலை செய்வார் என நினைக்கிறீர்கள்?
2. *ஆமா*-க்கள் திருமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டதாக நினைக்கிறீர்களா?
3. உங்களுக்கு வீட்டு வேலைகள் செய்யப் பிடிக்குமா?



சிங்கப்பூரின் ஆமாக்கள் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள் – e-NLB மின்சேவையில்
https://go.gov.sg/nhbcsk3-majie

# மளிகைக்கடை உரிமையாளர், 1950கள் - 1960கள்




**தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1148982

# மளிகைக்கடை உரிமையாளர், 1950கள் - 1960கள்

## பின்னணி:

ஓர் ஆடவர் 1950கள் முதல் 1960கள் வரையிலான காலக்கட்டத்தில் மளிகைக்கடை முகப்புக்குப் பின்னால் நிற்கிறார்.

அரிசி, மசாலைப் பொருட்கள், டின்னில் அடைத்த உணவுப் பொருட்கள், வீட்டுப் பொருட்கள் போன்ற அன்றாடப் பயன்பாட்டுப் பொருட்களை விற்பனை செய்த மளிகைக்கடைகள் சிங்கப்பூரில் பரவலாக அமைந்திருந்தன.


சில மளிகைக்கடைகள் கடனுக்கும் வியாபாரம் செய்தன. வழக்கமான வாடிக்கையாளர்கள் கடனுக்குக் கடையிலிருந்து பொருட்களை வாங்குவார்கள். கடை உரிமையாளர்கள் பதிவேட்டில் விவரங்களைக் குறித்து வைப்பார்கள். ஒருசில மாதங்களுக்குப் பின்னர் வாடிக்கையாளர்கள் திரும்பிவந்து பணத்தைக் கொடுப்பார்கள்.

இன்று, பெரும்பாலான மளிகைக்கடைகளுக்குப் பதிலாகப் பெரிய பேரங்காடிகள் அல்லது சியர்ஸ், 7-லெவன் போன்ற பல்பொருள் கடைகள் முளைத்துள்ளன. சிங்கப்பூரில் மிகச்சில மளிகைக்கடைகளே எஞ்சியுள்ளன. பழைய பொது வீடமைப்புப் பேட்டைகளில் அவற்றைக் காணலாம்.

1. மளிகைக்கடையில் நீங்கள் என்னென்ன பொருட்களை வாங்க முடியும்?
2. உங்களுக்கு மளிகைக்கடைக்குச் செல்லப் பிடிக்குமா அல்லது பேரங்காடிக்குச் செல்லப் பிடிக்குமா?
3. உங்களுக்குத் தேவையான அன்றாடப் பொருட்களை வழக்கமாக எங்கே வாங்குகிறீர்கள்?

மரபுடைமை அத்தியாயங்களைப் பாருங்கள் - பாரம்பரிய மளிகைக்கடையின் கதை
https://go.gov.sg/nhbcsk3-provisionshop

# பெண் தையல்காரர் வெட்டிய காகித வடிவங்கள், 1980கள்



**திருவாட்டி ஈ குவாய் விங் வழங்கிய அன்பளிப்பு. தேசிய மரபுடைமைக் கழகத்தின் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்திற்கு நன்றி**

https://www.roots.gov.sg/Collection-Landing/listing/1262088

# பெண் தையல்காரர் வெட்டிய காகித வடிவங்கள், 1980கள்

## பின்னணி:

பெண் தையல்காரரான திருவாட்டி ஈ குவாய் விங், 1980களில் காகிதத்தில் வெட்டிய ஆடை வடிவங்கள்.

அளவெடுத்து ஆடை தைப்பதற்கு அல்லது அளவுகளில் மாற்றம் செய்வதற்கு, தையல்காரர்கள் காகிதத்தில் வடிவங்களை வெட்டி பயன்படுத்துவது வழக்கம்.

செய்தித்தாளிலிருந்து வெட்டப்பட்ட இந்தக் காகித வடிவங்கள், சியோங்சாம் அல்லது சீபாவ் எனும் பாரம்பரிய சீன ஆடையின் முன்பக்கம், பின்பக்கம், கழுத்துப்பகுதி, கைப்பகுதி ஆகியவற்றுக்குப் பயன்படுத்தப்பட்டது. மொத்தம் 16 வடிவங்களை வெட்டியெடுத்து, கையால் தைக்கப்படும் ஆடை இது. வசதிபடைத்த, செல்வாக்குமிக்கப் பதவிகளை வகித்த பெண்களிடையில் சியோங்சாம் பிரபலமாக இருந்தது. 1960கள் வரை சியோங்சாம் தையல் தொழிலுக்கு அமோக வரவேற்பு இருந்தது.

இன்று, திருமண விருந்துகள், சீனப் புத்தாண்டு போன்ற சமூக அல்லது விழாக்கால நிகழ்ச்சிகளில் மட்டுமே சியோங்சாம் பெரும்பாலும் அணியப்படுகிறது. சியோங்சாம் தையல் தொழில் நடத்தும் பலரும், நவீன விருப்பங்களுக்கு ஏற்ப பன்மயக் கலாசாரங்களை ஒருங்கிணைக்கவும் கற்றுக்கொண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, பத்திக் துணியை தங்களது வடிவங்களில் உள்ளடக்குகின்றனர்.

1. இந்த வடிவங்கள் எந்த வகையான துணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டன?
2. நீங்கள் இதற்குமுன் பெண் தையல்காரரிடம் அல்லது தையல்காரரிடம் உங்களுக்கு ஆடை தைத்துக் கொண்டதுண்டா?
3. உங்களுக்குத் தைக்கத் தெரியுமா?

சிங்கப்பூரில் சியோங்சாம் தையல்கலை பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-cheongsamtailoring

பாரம்பரிய சீன ஆடையான சியோங்சாம் பற்றி படித்து தெரிந்து கொள்ளுங்கள்
https://go.gov.sg/nhbcsk3-elizabethchoycheongsam

மூத்த சமூகத்தின் ஆற்றலை அங்கீகரித்து, அவர்கள் அர்த்தமுள்ள, நிறைவான வாழ்க்கை வாழ இயலச் செய்யும் நோக்குடன் சமூகப் பராமரிப்புப் பங்காளிகளுடன் மேற்கொள்ளப்படும் முனைப்பு.

**இம்முனைப்பை மேற்கொண்டோர்:**

National Heritage Board